பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 02 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பால் கொள்முதலை **50** சதவீதம் வரை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. யானைக் கால் நோயை அடுத்த ஆண்டுக்குள் ஒழிக்கும் இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. ஸ்வாமித்வா திட்டத்தின் கீழ் நாட்டில் இதுவரை **3** கோடியே **6** லட்சம் சொத்து அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய பஞ்சாயத்துராஜ் துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

4. கடல்சார் வளங்களை முறையாக பயன்படுத்த, மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் ஆகிருதி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பால் கொள்முதலை 50 சதவீதம் வரை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இரண்டாம் கட்ட வெண்மைப் புரட்சித் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளதாகக் கூறினார்.

பால் பண்ணை இல்லாத பகுதிகளில் பால் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

நாட்டில் ஏற்கனவே உள்ள ஒரு லட்சத்து 20 ஆயிரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் வலுப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதுவரை இந்த சங்கங்கள் இல்லாத பகுதிகளில் 75 ஆயிரம் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பால் உற்பத்தித் துறையில் மகளிரை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

யானைக் கால் நோயை அடுத்த ஆண்டுக்குள் ஒழிக்கும் இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

இந்த பாதிப்பு அதிமுள்ள 12 மாநிலங்களின் சுகாதாரத்துறை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நேற்று அவர் காணொலி மூலம் ஆலோசனை நடத்தினார்.

பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் அதைக் கட்டுப்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாநில அரசுகளை அவர் கேட்டுக்கொண்டார்.

நாடு முழுவதும் 6 லட்சத்து 20 ஆயிரம் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி இலக்குகளில் 2030ஆம் ஆண்டுக்குள் இந்நோயை ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆனால் அதற்கு முன்பாகவே 2027ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் இந்நோய் ஒழிக்கப்பட்டுவிடும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

ஸ்வாமித்வா திட்டத்தின் கீழ் நாட்டில் இதுவரை 3 கோடியே 6 லட்சம் சொத்து அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய பஞ்சாயத்துராஜ் துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், கிராமப்புறங்களில் உள்ள சொத்துகளை ட்ரோன் அடிப்படையிலான தொழில்நுட்பத்தில் அளவீடு செய்து இந்த அட்டைகள் வழங்கப்படுவதாக கூறினார்.

31 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை ஒரு லட்சத்து 86 ஆயிரம் கிராமங்களில் இது தொடர்பான பணிகள் நடைபெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு, தெலங்கானா, மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்கள் இத்திட்டத்தில் இணையவில்லை என்று திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரிக்ஸ் மாநாட்டின் தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நேற்று ஆலோசனை நடத்தினார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பு தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதாக சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்புக்கான சிறந்த அமைப்பாக இது திகழ்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளின் கூட்டு செயல் திட்டம் குறித்தும், ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கடல்சார் வளங்களை முறையாக பயன்படுத்த, மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஒடிசாவின் அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. கிருஷ்ணசந்திர பத்ரா புதுதில்லியில் நேற்று திரு. ஜிதேந்திர சிங்கை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது மாநிலத்தில் கடல்வளங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டது.

அப்போது பேசிய திரு. ஜிதேந்திர சிங் நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் உள்ள வளங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என்று கூறினார்.

இதில் ஒடிசா முக்கிய பங்கு வகிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

கடல் வளங்கள், கனிம வளம், அணுசக்தி மேம்பாடு, விண்வெளி உள்கட்டமைப்பு, உயிரி அறிவியல் ஆய்வு ஆகிய அனைத்திற்கும் ஒடிசா சிறந்த இடமாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.

ஆழ்கடல் இயக்கம் கடலோர பகுதி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்று அவர் கூறினார்.

ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் தொடர்பாக மாநில அரசுகளுடன் உரிய ஆலோசனை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் ஃபிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் வரும் 17ஆம் தேதி இந்தியா வர உள்ளார்.

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வரும் அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

வரும் 19ஆம் தேதி புதுதில்லியில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டிலும் திரு. இம்மானுவேல் மேக்ரோன் பங்கேற்க உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு புதுதில்லியில் நேற்று பல்வேறு மத்திய அமைச்சகர்களை சந்தித்து மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை சந்தித்த அவர், ஆந்திராவுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து பேச்சு நடத்தினார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவுடனும் திரு. சந்திரபாபு நாயுடு ஆலோசனை மேற்கொண்டார்.

ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவை சந்தித்த அவர், பட்ஜெட்டில் ஆந்திராவுக்கு அறிவிக்கப்பட்ட ரயில்வே திட்டங்களுக்காக நன்றி தெரிவித்ததுடன், இவற்றை விரைந்து செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

மத்திய எஃகுத்துறை அமைச்சர் திரு. குமாரசாமியை சந்தித்துப் பேசிய அவர், விசாகப்பட்டினத்தில் உள்ள எஃகு ஆலை விரிவாக்கப் பணிகளுக்கு அனுமதி அளித்ததற்காக நன்றி தெரிவித்தார்.

நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர் லாலை சந்தித்த திரு. சந்திரபாபு நாயுடு, மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹானை சந்தித்த ஆந்திர முதலமைச்சர், மாநிலத்தில் தற்போது 20 லட்சம் விவசாயிகள், இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வருவதாக கூறினார்.

மாநிலத்தில் இயற்கை விவசாயத்திற்கு ஊக்கமளிக்க மேலும் அதிக ஆதரவு வழங்க வேண்டும் என்று திரு. சந்திரபாபு நாயுடு கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அசாமில் இறுதி வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

இதில் 2 கோடியே 42 லட்சம் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

2 லட்சத்து 43 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் பல்வேறு காரணங்களுக்காக நீக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டிலேயே அதிக அளவில் அன்னிய நேரடி முதலீடுகளை மகாராஷ்டிரா ஈர்த்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் கூறியுள்ளார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்ற கூட்டத்தின்போது 30 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

இதில் 12 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் இறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொழில்துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் மாநிலத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு. தேவேந்திர பட்னவிஸ் கூறினார்.

<<<<>>>>

தெலங்கானாவில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

116 நகராட்சிகளுக்கும், 7 மாநகராட்சிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணிக்கை நாளை மறுநாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மியான்மர் மற்றும் பங்களாதேஷில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் இது 6ஆக பதிவானதாக அமெரிக்க நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பசிபிக் பெருங்கடலில் 515 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையம் அமைந்திருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் வெளியாகவில்லை.

<<<<>>>>

ஆசிய துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் ஆகிருதி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் தனிநபர் இறுதிச்சுற்றில் அவர் இந்தப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இதில் மற்றொரு இந்திய வீராங்கனை அஞ்சும் வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஜூனியர் மகளிர் பிரிவில் இந்தியாவின் **Brachi Gaikwad** தங்கப்பதக்கம் வென்றார்.

இதில் மற்றொரு இந்திய வீராங்கனை அனுஷ்கா தாக்கூர் வெண்கலப்பதக்கம் வென்றார்.

இதில் குழுப் பிரிவிலும் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **39** தங்கம், **15** வெள்ளி, **12** வெண்கலப் பதக்கம் வென்று பதக்கப்பட்டியலில் முன்னிலையில் உள்ளது.

**<<<<The End>>>>**